1978 பிப்ரவரி 25]

திரு. பி. ஆர். தாமஸ்: பஞ்சாயத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பி.டி. பட்டம் பெற்றவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. க. அறிவழகன்: மூலக் கேள்வியினுடைய முன் பகுதி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்களில் பி.டி. பட்டம் பெற்றவர்களுக்குத் 'தலைமையாசிரியர் பதவி தருவதில் முன்னுரிமை அளிக்கப் படுமா என்பதுதான். அப்படி முன்னுரிமை அளிப்பதிலே அரசு உறுதியாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படி முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய உறுதியான கொள்கை.

State Backward Classes Welfare Advisory Board.

* 138 Q—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of Thiru V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to reorganise the State Backward Classes Welfare Advisory Board; and

(*b*) if so, whether the Government will take necessary action to include the representatives of the people in the new Advisory Board?

மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், புதிய ஆலோசனைக் குழுவில் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெற அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(இ) இக்குழு திருத்தி அமைக்கப்படும்பொழுது அதில் மக்கள் பிரதி நிதிகள் சிலரும் இடம்பெறுவர்.

திரு. மு. மாசிலாமணி : பின்தங்கியோர் நலனில் அக்கறை செலுத்தி அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதற்காக முந்தைய அரசு ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்து செயலாற்றி வந்தது. அந்தக் குழு இப்போது நடைபெறவில்லை. அக்குழு எந்த இடத்தில், எந்த ஆண்டு, எந்தத் தேதியில் இறுதியாகக் கலைக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயல்பட்டு வந்த அந்த ஆலோசனைக் குழு, கடைசியாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலத்தில் 22-7-1974 அன்று கூடியது. அதற்குப் பிறகு அந்தக் குழு இன்னும் திருத்தியமைக்கப்படவில்லை.

திரு. மு. மாசிலாமணி : அந்தக் குழுவினுடைய அமைப்பில் கிட்டத்தட்ட 169 பின்தங்கிய சமுதாயத்தினரை உள்ளடக்கி அரசு கெஜட்டில் பதிவாக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய நலனைக் கருத்திற் கொண்டு சட்டநாதன் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரையை அமுல் செய்ய அந்தக் குழு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தது. அந்தப் பரிந்துரைகளை மீண்டும் செயல்பட வைக்குமா இந்த அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டநாதன் அவர்களுடைய பரிந்துரையை அரசு தீவிரமாகப் பரிசிலனை செய்து, அவற்றில் சிலவற்றை நடைமுறைப் படுத்தியிருக்கிறது. அகில இந்திய அளவிலே பின்தங்கிய மக்களின் நலனுக்காக இப்போது மத்திய அரசு ஒரு கமிஷனை நியமித்திருக் கிறது. பின்தங்கியோர்களுக்குப் பொருளாதார வகைகளையும், இதர நிலைமைகளையும் சீர்படுத்துவதற்காக உள்ள ஒரு நல்ல வாய்ப்பு அதிலே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அமைப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Laws for Uplift of Women.

*139 Q.—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of Thiru V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Central Government have requested the State Government to enact laws for the uplift of women;

(*b*) whether the Central Government have made any recommendations in this regard;

(*c*) if so, the details thereof; and

(*d*) the manner in which the State Government propose to implement the request of the Central Government?